வாசிக்க: லூக்கா 23:26-38

***"பிதாவே, இவர்களுக்கு மன்னியும்; தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" (லூக் 23:34)***

நமக்காகத் தம்மையே பலியாக்கிய ஆண்டவர் இயேசு கிறிஸ்து சிலுவையில் தாங்கொண்ணா வேதனைகளைச் சகித்த வேளையில் மொழிந்த ஏழு வசனங்களும் சுவிசேஷத்தின் அத்தனை கூறுகளையும் உள்ளடக்கியுள்ளன. சிலுவை வசனங்கள் ஒவ்வொன்றும் எவ்வாறு சுவிசேஷத்தின் ஒரு குறிப்பிட்ட பகுதியை வலியுறுத்துகிறது என்பதை இன்றும் வரும் ஆறு நாட்களும் தியானிப்போம்.

முதலாவதாக, கடவுளது மன்னிப்பின் செய்தியைச் சுமந்து வருவதே சுவிசேஷமாகும். அதைப் பிரசங்கிக்கத்தான் இயேசு சீடர்களுக்குக் கட்டளையிட்டார். "மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் துவங்கி எல்லா நாட்டினருக்கும் அவரது பெயரால் பிரசங்கிக்கப்படவேண்டும்" (லூக் 24:47).

கடவுள் முதலும் முக்கியமுமாகப் "பாவியை" மன்னிக்கிறார்; அப்பொழுது அவனது "பாவங்களும்" மன்னிக்கப்பட்டுவிடுகின்றன. பாவம் செய்ததால் நாம் பாவிகளாகவில்லை; பாவிகளாயிருப்பதால்தான் பாவம் செய்கிறோம். வேரில்தான் கடவுள் கைவைப்பார், கிளையில் அல்ல. கிறிஸ்துவுக்குள் கடவுள் நம்மை முற்றிலும் மன்னித்து ஏற்றுக்கொள்ளும்போது, நம்மைப் பரிசுத்தவான்கள் என்றழைக்கிறார். பரிசுத்தமாய் இருப்பதால் நாம் பரிசுத்தவான்களாவது கிடையாது; பரிசுத்தவான்களாய் இருப்பதால் பரிசுத்தமாய் வாழவேண்டும்.

இரு திருடருக்கிடையில், விண்ணுக்கும் மண்ணுக்கும் நடுவில், இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையில் இயேசு சிலுவையில் தொங்குகையில் நமது கடந்தகால, நிகழ்கால, எதிர்காலப் பாவங்கள் எல்லாவற்றிற்கும் பரிகாரம் செலுத்திவிட்டார். இனி வேறு பலியேயில்லை. நமது பாவங்கள் ஒருபோதும் செய்யப்படாததுபோல், அந்த அளவுக்கு, மன்னிக்கப்பட்டுவிட்டன. முழு நிராகரிப்பு!

இன்று நாம் பாவஞ்செய்தால் விண்தந்தையின் முன் கிறிஸ்து நமக்காகப் பரிந்து பேசுகிறார். நாம் நமது பாவத்தன்மையை ஒத்துக்கொண்டு அவருக்குமுன் ஒளிவு மறைவின்றி நடந்துகொண்டிருந்தால் ஆட்டுக்குட்டியானவராகிய அவரது இரத்தம் நம்மைக் கழுவிக்கொண்டேயிருக்கும். கூழாங்கற்கள்மீது வற்றா நதி ஓடிக்கொண்டேயிருப்பதுபோன்று இம்மானுவேலரின் இரத்தவெள்ளம் நம்மைத் தூய்மைப்படுத்திக்கொண்டேயிருக்கும் (1 யோ 1:7; 2:1). செய்யவேண்டியதைச் செய்யாதது எனும் பாவங்களே செய்யக்கூடாததைச் செய்தது எனும் பாவங்களைவிட அதிகம். எனவே நாம் கிறிஸ்துவின் இரத்தத்திற்கு வெளியே நொடிப்பொழுதும் இருக்க முடியாது.

சிறைக்குள் இருப்போரைவிட குற்றவுணர்வு என்னும் சிறைவாசத்தில் வாழ்வோர்தான் ஏராளம். சுவிசேஷமோ விடுதலை மணியடிக்கிறது! பாவ மன்னிப்பு கொடுக்க பாவத்திற்காய் மரித்த இயேசுவுக்கு மட்டுமே அதிகாரம் உண்டு!

*அறிக்கையிடப்பட்ட பாவங்கள் மன்னிக்கப்பட்டாயிற்று;*
*மன்னிக்கப்பட்ட பாவங்கள் மறக்கப்பட்டாயிற்று!*